


**13.05.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. நாட்டின் பாதுகாப்பிற்காக அளப்பறிய சேவையாற்றிய முப்படை வீரர்களை இந்தியா என்றென்றும் நன்றியுடன் நினைவுகூறும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

2. மேற்கு எல்லைப்பகுதியில் பாதுகாப்பு நிலைமையை மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று ஆய்வுசெய்தார்.

3. தீவிரவாதத்திற்கு எதிராக அனைத்து தரப்பு மக்களும் ஒருங்கிணைந்து ஒற்றுமையை பறைசாற்றி உள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

4. **CBSE** 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

5. ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ரோஹன் போபண்ணா, ஆடம் இணை இன்று களமிறங்குகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

நாட்டின் பாதுகாப்பிற்காக அளப்பறிய சேவையாற்றிய முப்படை வீரர்களை இந்தியா என்றென்றும் நன்றியுடன் நினைவுகூறும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

பஞ்சாப் மாநிலம் ஆதம்பூர் விமான படைதளத்தை இன்று நேரில் பார்வையிட்ட பின்னர், பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் விமானப்படை வீரர்கள் மற்றும் ஜவான்களுடன் தாம் கலந்துரையாடியதாக குறிப்பிட்டார்.

வீரதீரத்துடனும், துணிச்சலுடனும், தீர்க்கத்துடனும், அச்சமின்றியும் செயலாற்றிய விமானப்படை வீரர்களுடன் கலந்துரையாடியது சிறப்பான அனுபவமாக அமைந்தது என்று பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

முன்னதாக விமானப்படை அதிகாரிகள், வீரர்கள் ஜவான்கள் பிரதமரிடம் விமானப்படை செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தனர்.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் வெற்றியை தொடர்ந்து பிரதமர் ஆதம்பூர் விமானப் படைதளத்தை இன்று பார்வையிட்டுள்ளார்.

முன்னதாக நேற்று நாட்டுமக்களிடையே உரையாற்றியஅவர், தீவிரவாதத்தை எதிர்கொள்ள தேசத்தின் அளப்பறிய அர்ப்பணிப்பை எடுத்துரைத்தார்.

இந்தியா மீதான பயங்கரவாத தாக்குதலுக்கு இனி தக்க பதிலடி வழங்கப்படும் என கூறிய பிரதமர், அணு அச்சுறுத்தல், மிரட்டல்களுக்கு இந்தியா அடிபணியாது என்றார்.

❖❖❖❖❖❖❖❖

<u>ராஜ்நாத் சிங்</u>

நாட்டின் மேற்கு எல்லைப்பகுதியில் பாதுகாப்பு நிலைமையை மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று ஆய்வுசெய்தார்.

புதுதில்லியில் முப்படை தலைவர்கள் கூட்டத்தில் இன்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் இதுதொடர்பான ஆய்வு விரிவாக மேற்கொள்ளப்பட்டது.

பாதுகாப்பு செயலர் திரு. ராஜேஷ்குமார் சிங்கும் இந்த கூட்டத்தில் பங்கேற்றார்.

❖❖❖❖❖❖❖❖

<u>எல்.முருகன்</u>

தீவிரவாதத்திற்கு எதிராக அனைத்து தரப்பு மக்களும் ஒருங்கிணைந்து ஒற்றுமையை பறைசாற்றி இருப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பிரதமர், நாட்டு மக்களிடையே நேற்றிரவு ஆற்றிய உரை பயங்கரவாதத்திற்கு எதிரான நம்நாட்டின் நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துரைத்திருப்பதாக குறிப்பிட்டார்.

தீவிரவாத முகாம்களை தகர்த்தெறிந்து, பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்தியதில் ராணுவ வீரர்கள் ஆற்றிய மிகப்பெரிய பங்களிப்பிற்கு தமிழக மக்கள் சார்பில் நன்றியை உரித்தாக்கி கொள்வதாக அமைச்சர் கூறினார்.

.. வாய்ஸ் ..

தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளாக ஊழல் நடைபெற்றுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

முன்னதாக தூத்துக்குடியில் உள்ள பி.ஜே.பி. அலுவலகத்தில் கட்சி நிர்வாகிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

ஸ்ரீவைகுண்டம் பழையகாயல் பகுதியில் பொதுமக்களுக்கு பதனீர் வழங்கும் பணியை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

<u>திரங்கா</u>

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை தொடர்ந்து நாடுமுழுவதும் பி.ஜே.பி. திரங்கா மூவர்ணகொடி இயக்கம் இன்று தொடங்கியது.

11 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வில் முன்னாள் ராணுவப்படையினர், சமூக பணியாளர்கள், பி.ஜே.பி. தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

வரும் 23-ம் தேதி வரை நடைபெறும் இந்த விழிப்புணர்வு இயக்கத்தில், பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு ஜம்முகாஷ்மீரில் உள்ள தீவிரவாத முகாம்களை இந்தியா எவ்வாறு தகர்த்தது என்பது குறித்து எடுத்துரைக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

துப்பாக்கி சண்டை

ஜம்மு காஷ்மீர் ஷோப்பியான் மாவட்டம் ஷுக்ரு கெல்லார் வனக்காடுகளில் பாதுகாப்பு படையினர் மற்றும் தீவிரவாதிகளுக்கு இடையே இன்றுகாலை துப்பாக்கி சண்டை நடைபெற்றது.

சுக்ரு வனப்பகுதியில் காவல்துறையினர், ராணுவப் பாதுகாப்பு படையினர், மத்திய ரிசர்வ் காவல்படையினர் இணைந்து தீவிரவாதிகளின் நடமாட்டம் தொடர்பாக தேடுதல் வேட்டையை மேற்கொண்ட போது பதுங்கியிருந்த தீவிரவாதிகள் மறைவிடங்களிலிருந்து துப்பாக்கியால் சுட்டனர்.

பதிலுக்கு பாதுகாப்பு படையினரும் துப்பாக்கி சூடு நடத்தினர். இச்சம்பவத்தில் உயிரிழப்பு குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

நீலகிரி மாவட்டம் முதுமலை தெப்பக்காட்டில் யானை பாகன்கள் மற்றும் உதவியாளர்களுக்கு கட்டப்பட்ட 44 வீடுகளை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று திறந்துவைக்கிறார்

பழங்குடியின மக்களிடையேயும் முதலமைச்சர் இன்று கலந்துரையாடுகிறார்.

பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்குகிறார்.

5 நாள் பயணமாக நீலகிரி சென்றுள்ள முதலமைச்சர் நாளை மறுநாள் உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர் கண்காட்சியை துவக்கி வைக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

## CBSE RESULTS

மத்திய கல்வி வாரியம் **CBSE** 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

தேர்வு முடிவுகளை **cbse.gov.in** மற்றும் **results.nic.in, umang.gov.in** உள்ளிட்ட இணைய தளங்களில் அறிந்து கொள்ளலாம்.

**CBSE** 12-ம் வகுப்பு தேர்வில் 88.39 சதவிகித மாணாக்கர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மாணவிகள், மாணவர்களை விட 5.94 சதவிகிதம் கூடுதலாக தேர்ச்சியடைந்துள்ளனர்.

சென்ற ஆண்டை விட 0.41 சதவிகித அளவிற்கு தேர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளது.

சென்னை மண்டலம் 97.39 சதவிகித தேர்ச்சியுடன் 3-வது இடத்தை பெற்றுள்ளது.

விஜயவாடா மண்டலம் 99.6 சதவிகிதத்துடன் முதலிடத்தையும்,

திருவனந்தபுரம் மண்டலம் 99.32 சதவிகிதத்துடன் 2-வது இடத்தையும் பெற்றுள்ளன.

16 லட்சத்து 92 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் **CBSE** 12-ம் வகுப்பு தேர்வை எழுதினர்.

**CBSE** 10-ம் வகுப்பு பொதுதேர்வில் **93.66** சதவிகித மாணாக்கர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

சென்ற ஆண்டை காட்டிலும் தேர்ச்சி விகிதம் 0.06 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

மாணவிகள் அதிகளவில் தேர்ச்சியடைந்துள்ளனர்.

திருவனந்தபுரம் மண்டலம் முதலிடத்தையும்,

சென்னை மண்டலம் 4-வது இடத்தையும் கைப்பற்றியுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

ராஜேந்திரன்

சேலம் ஏற்காட்டில் 48-வது கோடை விழா வரும் 23-ம் தேதி தொடங்கவுள்ளதாக மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஏற்காட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 7 நாட்களுக்கு நடைபெறும் இவ்விழாவில் மலர்கண்காட்சி, ஆரோக்கிய குழந்தை போட்டி உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

தா.மோ.அன்பரசன்

தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் 56 ஆயிரத்து 299 அடுக்குமாடி குடியிருப்புகள், ஏழை எளிய மக்களுக்கு கட்டித்தரப்பட்டுள்ளதாக மாநில குறுசிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார். சென்னை கைலாசபுரத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்ட பகுதிகளில், கட்டுமான பணிகளை இன்று ஆய்வு செய்த அவர், 587 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 5 ஆயிர்தது 180 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் விரைவில் திறக்கப்பட உள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

சிவசங்கர்:

அரியலூர் மாவட்டத்தில் 2 கோடியே 27 லட்ச ரூபாய் மதிப்பில் 19 வளர்ச்சித்திட்ட பணிகளை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

கிளிமங்கலம், கீழமாளிகை, பாளையக்குடி கிராமங்களில் 3 ஏரிகளை சீரமைக்கும் பணிகளை தொடங்கிவைத்ததோடு, இரும்புலிக்குறிச்சி, குமுளியம் கிராமங்களில் புதிய நியாயவிலைக்கடைகளையும் அமைச்சர் திறந்துவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

சென்னை திருவெற்றியூரில் ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டாக்களை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசியஅவர், சென்னையில் மட்டும் ஒருலட்சத்து 38 ஆயிரம் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டு உள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

பொள்ளாச்சி வழக்கு

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிகள் 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து கோவை கூடுதல் மகளிர் நீதிமன்ற நீதிபதி நந்தினி தேவி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

2019-ம் ஆண்டு முதல் இந்த வழக்கு கோவை சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் இன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

சிவகங்கை வாய்ஸ்

சிவகங்கை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நெல்கொள்முதல் நிலையங்கள் மூலம் 58 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

காஞ்சிபுரம் வாய்ஸ்

காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோவில் வைகாசி பிரம்மோற்சவத்தில் இன்று தங்க கருட சேவை நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

தென்மேற்கு பருவமழை

தென்மேற்கு பருவமழை, தெற்கு, வடக்கு அந்தமான் கடற்பகுதிகள், நிக்கோபார் தீவு பகுதிகளில் இன்று தொடங்கியுள்ளது.

தெற்கு அரபிக்கடல் பகுதி, மாலத்தீவு, குமரிக்கடல், வங்ககடலின் தெற்கு பகுதி, அந்தமான் நிக்கோபார் தீவுகளின் இதர பகுதிகளிலும் இது அடுத்த 3, 4 தினங்களில் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இன்று அடுத்த சிலமணி நேரங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

## டென்னிஸ்

ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா, செக் குடியரசின் ஆடம் இணை - இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖